செ.வெ.எண்: 55/ பிப்ரவரி நாள்: 26.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பேராவூர் ஊராட்சியில் உள்ள காட்டூரணி கிராமத்தில் சிறப்பு கிராம சபைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், பேராவூர் ஊராட்சியில் உள்ள காட்டூரணி கிராமத்தில் இன்று (26.02.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், இறந்தவர்களின் பெயர்களை நீக்கம் செய்தல், இரட்டைப் பதிவுகளை நீக்கம் செய்தல் தொடர்பான சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 429 கிராம ஊராட்சிகளிலும் இன்றைய தினம் எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், இறந்தவர்களின் பெயர்களை நீக்கம் செய்தல், இரட்டைப் பதிவுகளை நீக்கம் செய்தல் தொடர்பான சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது. வாக்களிப்பது ஒவ்வொரு இந்திய குடிமகனின் அடிப்படை உரிமையாகும். 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களாக தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள தாமாக முன்வர வேண்டும். மேலும் தவறுகள் ஏதும் இல்லாத வாக்காளர் பட்டியல் தயார் செய்திட ஏதுவாக இறந்தவர்களின் பெயர்களை நீக்கம் செய்தும், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ள இரட்டைப் பதிவுகளில் ஒன்றினை வாக்காளர்களின் ஒப்புதலோடு கட்டாயம் நீக்கம் செய்திடவும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதை முற்றிலுமாக தவிர்த்திட வேண்டும். தமிழ்நாடு அரசு, தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்காக ரூ.12 ஆயிரம் வழங்கி வருகிறது. கழிப்பறைகள் இல்லாத வீடுகளில் இத்திட்டத்தினைப் பயன்படுத்தி கழிப்பறைகள் கட்டுவதற்கு பொதுமக்கள் ஆர்வத்துடன் முன்வர வேண்டும். மேலும் தங்களது சுற்றுப்புறங்களில் அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு சுகாதாரத்தினை மேம்படுத்திட வேண்டும் . கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகள் வருகின்ற மார்ச் 1 முதல் மார்ச் 21 வரை நடைபெறவுள்ளது. இம்முகாமினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், பேராவூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.கோட்டைச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.சரோஜா உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**